CASE NO : CP 24/2024

NAME : PW1 – ஆர். சந்திரசேகரன்

DATE : 18.03.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கை தொழிற்தாவா 711/1999ன் படி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். Ex P1 ஆவணத்தின் படி கடைசியாக நான் பெற்ற சம்பளம் ரூ. 3550/-, சம்பளமும் 7 ஆண்டுகள் ஓட்டுநராக பணிபுரிந்து வந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ID 711/1999 ன் வழக்கு உத்தரவின் படி 50% back wages மற்றும் மீண்டும் ஓட்டுநர் பணியும் வழங்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex P117 ஆவணத்தின் படி 07.12.2023 ல் எனக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டதை எதிர்த்து நான் தொழிலாளர் துறையில் வழக்கு தொடர்ந்தேன் என்றால் சரிதான். அதற்காக நான் தாக்கல் செய்த மனு தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த ஆவணம் Ex R1. ID 711/1999 உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள் என்றால் சரிதான். உயர்நீதிமன்ற உத்தரவின் படி 50% back wages எதிர்மனுதாரர் வழங்கினார்கள் என்றால் ரூ. 35,350/- எனக்கு 17(b) சம்பள பாக்கிக்காக கொடுத்தார்கள். உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் வரை தான் 50% back wages என்றால் அது சரியல்ல. நவம்பர் 1998 லிருந்து full wages தான் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான்

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1992 முதல் 1998 வரை பணியாற்றினேன் என்றால் சரிதான். 1998 க்கு முன்பான காலகட்டத்திற்க நான் எந்த விதமான தொகையும் கோரவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் எத்தனை சங்கம் வைத்துள்ளார்கள் என்றால் KSB employees Union சங்கம் உள்ளது. அதில் நான் member அல்ல. நான் BMS unionல் member என்றால் சரிதான். என்னை வேலையில் எதிர்மனுதாரர் நிறுத்திய பிறகு தான் நான் அந்த சங்கத்தின் மூலமாக தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவில் Fork lift operator என்ற வேலை கொடுக்க வேண்டும் என்று எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு மீண்டும் பணி கொடுக்க வேண்டும் என்று தான் உத்தரவு உள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.